**போக்குவரத்து இணைப்பு மற்றும் சொத்து மேலாண்மை செயற்திட்டம் - 2019.**

---

போக்குவரத்து இணைப்பு மற்றும் சொத்து மேலாண்மை செயற்திட்டத்தின் 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிச குடியரசிற்கும் சர்வதேச அபிவிருத்தி சங்கத்திற்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2017 செப்தெம்பர் 29 ஆந் திகதி 5788–எல்கே ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் பிரிவு 11, பொது நிபந்தனைகள் பீ(3) மற்றும் 4.09(பீ) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

---

கடன் உடன்படிக்கையின் பிரகாரம், தற்போது வீதி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு என அழைக்கப்படுகின்ற முன்னைய உயர்கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு செயற்திட்ட நிறைவேற்று முகவராகவும் வீதி அபிவிருத்தி அதிகாரசபை அமுலாக்கல் முகவராகவும் உள்ளன. சொத்து முகாமைக்கான வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் திறனை அதிகரித்தல் மற்றும் பைலட் முகாமைத்துவ கோட்பாட்டிற்கான வெளியீடு மற்றும் செயல்திறன் சார்ந்த சாலை ஒப்பந்த முறைமையை பயன்படுத்தி வடிவமைத்தல் - நிர்மாணித்தல்-பராமரித்தல் முறையிலான ஒப்பந்தத்தின் முன்னோடி செயற்திட்டமாக ஜாஎல தொடக்கம் பேலியகொட - புத்தளம் வீதியிலுள்ள சிலாபம் நகரத்தின் முடிவு வரை தெரிவு செய்யப்பட்ட 58 கிலோமீற்றர்கள் வரையான வீதி திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதே செயற்திட்டத்தின் குறிக்கோள்களாகும். கடன் உடன்படிக்கை இல:5788 இன் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா. 18,125 மில்லியனிற்கு சமமான எஸ்.டி.ஆர் 90.5 மில்லியன் (ஐ.அ.டொலர் 125 மில்லியன்) சர்வதேச அபிவிருத்தி சங்கத்தால் நிதியளிக்கப்பட வேண்டுமென உடன்பாடு காணப்பட்டது. இருப்பினும், 2018 ஒகஸ்ட் 15 ஆம் திகதிய அமைச்சரவை தீர்மான இல: 18/1682/805/051 இன் பிரகாரம் செயற்திட்டத்தின் ஆரம்ப வேலைப்பரப்பானது மாற்றியமைக்கப்பட்டிருந்தது. அதனடிப்படையில், ஆரம்ப கடன் ஒதுக்கீட்டில் ரூபா. 14,500 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 100 மில்லியன் செயற்திட்டத்திலிருந்து நீக்கப்பட்டு அனைத்து மாகாண வீதிகளின் மேம்படுத்தலிற்காக மாகாண சபைகள், உள்ளூராட்சி மன்றங்கள் மற்றும் விளையாட்டு அமைச்சிற்கு மாற்றப்பட்டிருந்தது. மிகுதித் தொகையில்இ மொத்தமாக ரூபா. 2,320 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 16 மில்லியன் செயற்திட்டத்தின் நடவடிக்கைகளை தொடர ஒதுக்கப்பட்டிருந்ததுடன் மிகுதி ரூபா. 1,232.5 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 8.5 மில்லியன் வீதி பராமரிப்பு நம்பிக்கை நிதியத்திற்கு மாற்றப்பட்டிருந்தது. செயற்திட்டமானது அதன் நடவடிக்கைகளை 2016 ஜூன் 30 ஆந் திகதி ஆரம்பித்திருந்ததுடன் 2018 ஒகஸ்ட் 15 இல் மீள்கட்டமைக்கப்பட்டு 2023 மார்ச் 31 அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டிருந்தது.

## 1.3 அபிப்பிராயம்

---

செயற்திட்டத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாரா நிதி நிலைமையியையும் நிதிச் செயலாற்றல் மற்றும் அதனது முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் அதனுடன் இனைந்த நிதிக் கூற்றுக்கள் என்பன இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க உண்மையானதும் நேர்மையானதுமான நிலைமை ஒன்றை தருகின்றது என்பது எனது அபிப்பிராயம் ஆகும்.

## 1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல்,

வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு நலிவுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக உரிய உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு விடயம் | தொகை ரூபா மில்லியன் | விளைவு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|---|
| (அ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் இல 05 இன் பந்தி இல 31 இன் பிரகாரம், பண உருப்படிகளின் தீர்ப்பனவு மீது எழுகின்ற நாணயமாற்று விகித வித்தியாசம் நிதிக்கூற்றுக்களில் அது இடம்பெற்ற காலப்பகுதியிலேயே வெளிப்படுத்தப்படல் வேண்டும். இருப்பினும், மத்திய வங்கி விசேட (டொலர்) கணக்கின் மீதெழுந்த ரூபா 1.96 மில்லியன் தொகையான நாணயமாற்று நட்டம் செயற்திட்டத்தின் கிரயமாக வெளிப்படுத்தப்படாமல் கடனின் பயன்படுத்தலிற்கு எதிராக ஈடுசெய்யப்பட்டிருந்தது. | 1.96 | கணக்கீட்டு நியமத்தின் தவறான பயன்பாடு. | நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் போது எதிர்காலத்தில் இவ்வாறான தவறுகளை சரி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் இல 05 உடன் இணங்க நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | செயற்திட்டத்தின் மொத்த கிரயம் ஐ.அ.டொலர் 16 மில்லியனாக காணப்பட்ட போதிலும் உத்தியோகத்தர்களிற்கான செயற்திட்ட கொடுப்பனவுகள் பி.எம்.யூ வின் 03 செயற்திட்டங்களின் மொத்த கிரயத்தை கருத்தில் கொண்டு கணிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன் பி.எம்.யு விலுள்ள ஏனைய செயற்திட்டங்களிற்கும் அதனை பிரித்தொதுக்காமல் போக்குவரத்து இணைப்பு மற்றும் சொத்து மேலாண்மை செயற்திட்டத்திற்கு மாத்திரம் சாட்டப்பட்டிருந்தது. | 1.24 | செயற்திட்டத்தின் உத்தியோகத்தர் கிரயம் அதிகரித்து காணப்பட்டது. | நெடுஞ்சாலைகள் மற்றும் வீதி அபிவிருத்தி பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் 03 செயற்திட்டங்களையும் பி.எம்.யூ வின் கீழ் உள்ளடக்கி பி.எம்.யூ வை வலையமைப்பு இணைப்பு மற்றும் சொத்து மேலாண்மை செயற்திட்டம் என பெயர் மாற்றவும் தீர்மானித்திருந்தார். | செயற்திட்ட கொடுப்பனவுகளை 03 செயற்திட்டங்களிடையே யும் பிரித்தொதுக்க நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

**3 பௌதீக செயலாற்றல்**

**3.1 செயற்திட்ட நடவடிக்கைகளின் பௌதீக மற்றும் நிதி செயலாற்றம்**

| இல | உருப்படி /உப உருப்படி | 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | | | தாமதம்/ கணக்காய்வு விடயம் | விளைவு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | எதிர்பார்க்கப்பட்ட பௌதீக செயலாற்றல் | அடையப்பெற்ற செயலாற்றல் | எதிர்பார்க்கப்பட்ட நிதி செயலாற்றம் ரூபா மில்லியன் | அடையப் பெற்ற நிதி செயலாற்றம் | | | |
| (அ) | சொத்து முகாமைத்துவ பங்களிப்பு | 10% | அறிக்கையிடப்படவில்லை. | 100 | அறிக்கையிடப்படவில்லை. | செயற்திட்டமானது 2019 செயல்திட்டத்தில் உள்ள 05 பிரதான நடவடிக்கைகளை அடைந்து கொள்ள நடைமுறை ஆண்டில் ரூபா 376 மில்லியனை செலவிட திட்டமிட்டிருந்தது. இருப்பினும், செயற்திட்டமானது செயல்திட்டத்தில் சொல்லப்பட்ட பிரதான குறிக்கோல்களை அடைவதற்கு நடவடிக்கை எடுத்திராததுடன் இலங்கை வீதி வழி முகாமைத்துவ முறைமை (எஸ்எல்ஆர்ஏஎம்எஸ்) மற்றும் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பல்வேறு செயற்பாடுகள் வலையமைப்பு அளவை வாகனம் (எம்எப்என்எஸ்வீ) போன்றவற்றின் பராமரிப்பு | செயற்திட்டத்தின் வேலைப்பரப்பை காலதாமதத்துடன் பூர்த்திசெய்வதற்கும் செயற்திட்த்தின் கிரயம் அதிகரிப்பதற்கும் சாத்தியம். | 2018 இன் செயற்திட்ட வேலைப்பரப்பின் மாற்றம் காரணமாக, உண்மைக்கிரயம் 79.21 மில்லியனாக இருந்தது இதில் 33.39 மில்லியன் நடைமுறை செலவினங்களிற்கும் 43.67 மில்லியன் சொத்து முகாமைத்துவ பிரிவிற்கும் செலவிடப்பட்டிருந்ததுடன் 2019 இல் 2.14 மில்லியன் மாத்திரமே உள்நாட்டு வெளிநாட்டு பயிற்ச்சிக்காக செலவிடப்பட்டிருந்தது. அதற்கான காரணம் விபரிக்கப்பட்டிருந்த பெறுகைத்திட்டத்திலுள்ள உரிய நடவடிக்கைகள் அடையப்பெறாததே ஆகும். |
| (ஆ) | இயவளவு நிர்மானம் மற்றும் பயிற்ச்சி. | 3% | அறிக்கையிடப்படவில்லை. | 8 | அறிக்கையிடப்படவில்லை. | | | |
| (இ) | கூடுதல் முறை செயற்பாட்டு கிரயம். | 28% | 3% | 82 | அறிக்கையிடப்படவில்லை. | | | |
| (ஈ) | உபகரணக் கொள்வனவு | 80% | அறிக்கையிடப்படவில்லை. | 174 | அறிக்கையிடப்படவில்லை. | | | |
| (உ) | ஆலோசனை | 3% | அறிக்கையிடப்படவில்லை. | 12 | அறிக்கையிடப்படவில்லை. | | | |

| | | |
|---|---|---|
| | | மற்றும் திருத்தத்திற்காக ரூபா 43.67 மில்லியன், உள்நாட்டு வெளிநாட்டு பயிற்ச்சிக்கு ரூபா 2.14 மில்லியன் மற்றும் பீ.எம்.யூ மிதான செலவுகளிற்கு ரூபா 33.39 மில்லியனையும் செலவிட்டிருந்தது. மேலும், பெறுகைத்திட்டத்திலுள்ள 09 உருப்படிகளுடன் தொடர்புபட்ட ரூபா 135.8 மில்லியன் மதிப்பிடப்பட்ட கிரயத்தில் 3 சதவீதமான செயலாற்றலே 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செயற்திட்டத்தினால் அடையப்பெற்றிருந்தமை அவதானிக்கப்பட்டது. |
| **கணக்காய்வாளரின் பரிந்துரைகள்** | சொத்து முகாமைத்து செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் தெளிவாக அடையாளப்படுத்தப்பட்டு எதிர்பார்க்கப்பட்ட காலப்பகுதிக்குள் குறிக்கோள்களை அடைந்து கொள்ள தேவையான திட்டம் தயாரிக்கப்படல் வேண்டும். | |

**3.2 குறைவாக பயன்படுத்தப்பட்ட வளங்கள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு விடயம் | விளைவு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | ரூபா 169.78 மில்லியன் தொகையான மொத்த நடைமுறை வேலையில், ரூபா 90.57 மில்லியன் தொகையே கருத்துரு வடிவமைப்புக்கள், நிலஅளவை, அபிவிருத்தி ஆராய்ச்சி ஆலோசனைக்கான நிறுவன (ஐடிஆர்சீ) பயன்பாட்டாளர் திருப்பி ஆய்வு ஆராய்ச்சி அபிவிருத்தி ஆலோசனை சமூக தாக்க அறிக்கை/ மீளச்செலுத்தல் செயலாற்றல் திட்டம் (ஆர்டிசீ-எஸ்ஐஏ/ஆர்ஏபீ) காணி சுவீகரிப்பு ஆய்வு மற்றும் பீஎம்யூ கிரயம் போன்ற நடவடிக்கைகளிற்கு செயற்திட்டத்தினால் ஏற்படுத்தப்பட்டிருந்தது. இருப்பினும், பேலியகொட - புத்தளம் வீதி மீதான ஜா-எல தொடக்கம் சிலாபம் நகரம் வரையான ஆரம்ப வீதியின் நிர்மானம் அரசாங்க தீர்மானத்தினால் 2018 ஓகஸ்ட் 15 இல் செயற்திட்டதின் வேலைப்பரப்பு மாற்றியமைக்கப்பட்டதன் பெறுபேறாக கைவிடப்பட்டதன் காரணமாக மேற்கூறிய நடவடிக்கைகளிற்கு செய்யப்பட்ட கொடுப்பனவுகள் பலனற்றதாக காணப்பட்டது. | ஜா-எல தொடக்கம் சிலாபம் வரையான வீதியின் பூர்வாங்கல் வேலைக்காக செயற்திட்டத்தினால் மேற்கொள்ளப்பட்ட மொத்தமாக ரூபா 90.57 மில்லியன் ஒப்பந்தமானது கைவிடப்பட்டு 2018 ஓகஸ்ட் 15 இல் செயற்திட்டமானது மறுகட்டமைக்கப்பட்டதன் காரணமாக பலனற்றதாக ஆகியமை அவதானிக்கப்பட்டது. | கருத்துறை ஏற்றுக்கொள்ளப்பட்டது. இருப்பினும், நாட்டில் முதன்முறையாக டிசீஏஎம்பீ இன் ஒப்பந்த வடிவத்தில் ஒபிபீஆர்சீ இற்காக தயார்க்கப்பட்ட உத்தரவுபத்திரங்கள் ஐ - வீதி செயற்திட்டத்தின் வீதி புனரமைப்பு ஒப்பந்தகளிற்காக பயன்படுத்தப்பட்டிருந்தது. | இழப்புக்களை குறைக்க நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும் |
| (ஆ) | திறைசேரியானது 2019 ஆம் ஆண்டிற்கான வெளிநாட்டு கடனின் பயன்பாட்டிற்கும் ஜீஓஎஸ்எல் செலவினத்திற்கும் செயற்திட்டத்திற்கு மொத்தமாக ரூபா 312 மில்லியன் மற்றும் ரூபா 60 மில்லியனை ஒதுக்கீடு செய்திருந்தது. இருப்பினும், செயற்திட்டமானது 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வெளிநாட்டு கடன் ஒதுக்கீட்டில் 16.98 சதவீதத்தினை பிரதிபலிக்கும் ரூபா 52.99 மில்லியன் மற்றும் ஜீஓஎஸ்எல் ஒதுக்கீட்டிலிருந்து 28.22 சதவீதத்தினை பிரதிபலிக்கும் 16.93 மில்லியனையும் மாத்திரமே பயன்படுத்தியிருந்தது. ஆனாலும், விசேட (டொலர்) | கடனில் கிடைத்த தொகை ரூபா 195 மில்லியன் 01 வருடத்திற்கு மேலாக பயனற்றதாக காணப்பட்டது. | விசேட (டொலர்) கணக்கிலுள்ள மிகுதித்தொகை 195 மில்லியன் செயற்திட்டத்தின் மீள்கட்டமைப்பிலிருந்தான விளைவான குறிக்கோள் மாற்றத்தின் காரணமாக செலவிடப்படாமல் காணப்பட்டது. | நிதியினை பயன்படுத்துவதன் வினைத்திறனை அதிகரிப்பதற்கு செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் முறையாக திட்டமிடப்படல் வேண்டும். |

கணக்கிலுள்ள மொத்தமாக ரூபா 195 மில்லியன் செயற்திட்டத்தின் நடவடிக்கைகளின் மந்தகதியான செயலாற்றல் காரணமாக 01 வருடத்திற்கு மேலாக செலவிடப்படாமல் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது.

## 3.3 மனிதவள முகாமைத்தவத்துடன் தொடர்பான விடயங்கள்

| கணக்காய்வு விடயம் | விளைவு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| செயற்திட்டமானது செயற்திட்ட நடவடிக்கைகளிற்காக 49 உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்பதற்கு 2015 ஏப்ரல் 10, 2017 நவம்பர் 16, 2019 ஜூலை 25 இல் முகாமைத்துவ சேவைகள் மிணைக்களத்திடமிரந்து பணிநிலை அனுமதியினை பெற்றிருந்தது. இருப்பினும், 14 உத்தியோகத்தர்களே செயற்திட்டத்தில் காணப்பட்டதுடன் 2019 திசெம்பர் 31 இல் 01 பெறுகை நிபுனர், 04 சிரேஸ்ட பொறியியலாளர்கள், 02 பொறியியலாளர்கள், 02 போக்குவரத்து முறைமை ஆய்வாளர், 2 ஐசீடி ஆய்வாளர், 06 வெளிக்கள உத்தியோகத்தர்கள் மற்றும் 9 உருவ ஆய்வாளர்கள் உள்ளடங்களாக 35 வெற்றிடங்கள் வெற்றிடங்களை நிரப்புவதற்கு எந்த நடவடிக்கைகளும் எடுக்கப்படாமல் நிரப்பப்படாமல் காணப்பட்டது. | செயற்திட்ட நடவடிக்கைகளில் தாமதத்திற்கான சாத்தியம். | பீஎம்யூ ஆனது 2018 மார்ச் 15 இல் பதவியனி அனுமதியை பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கையை ஆரம்பிக்க உயர்கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் செயலாளரிற்கு வேண்டுகோள் விடுத்திருந்ததுடன் இவ் வேண்டுகோள் வேண்டுகோள் விடுக்கப்பட்டு 07 மாதங்களின் பின்னர் 2018 ஒக்டோபர் 26 இல் எம்எஸ்டி இற்கு அனுப்பிவைக்கப்பட்டிருந்தது. வீதி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் செயலாளர் மீள் கட்டமைப்பு பூர்த்தியாக்கப்படும் வரை எம்எஸ்டி இற்கு ஆளனி மும்மொழிவை அனுப்புவதனை தாமதப்படுத்தியிருந்தார். | செயற்திட்டத்தின் நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கு தகுதியான உத்தியோகத்தர்களை ஆட்சேர்க்க நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |